# அருள்மிகு இலட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோயில், பூவரசங்குப்பம், விழுப்புரம் வட்டம் (ம) மாவட்டம்

## ஸ்தல வரலாறு.

**அமைவிடம்.**

விழுப்புரத்திலிருந்து தென்கிழக்கில் 20கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. பண்ருட்டி–விழுப்புரம் சாலையில் கள்ளிப்பட்டில் இறங்கினால் கிழக்கில் 3.கி.மீ. தொலைவிலும், புதுவை–விழுப்புரம், விழுப்புரம்–கடலூர் பேருந்து சாலையில் மடுகரைவழி சிறுவந்தாடு என்னும் ஊரிலிருந்து 3கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது.

**யாரால் கட்டப்பட்டது.**

இத்திருக்கோயில் 1000–2000 ஆண்டுகளுக்கு முன்பு நரசிம்ம பல்லவ மன்னனால் கட்டப்பட்டதாக செவிவழி செய்தியுள்ளது. விஜய நகர பேரரசு காலத்தில் பூவரசன் என்னும் சிற்றரசன் மூலம் திருப்பணிகள் செய்யப்பட்டது.

**ஊர் பெயர் காரணம்.**

இவ்வூர் பூவரசன் என்னும் மன்னன் ஆட்சிபுரிந்து வந்ததால் ‘ பூவரசன்குப்பம் ’ என பெயர்பெற்றதாக தெரியவருகிறது.

**தல வரலாறு.**

பகவான் நரசிம்மர் அகோபிலத்தில் இரண்யனை அழித்தபிறகு உக்கிரம் தனியாமல் அலைந்தார். இரண்யனின் கொடுமைக்கு1பயந்து காடுகளிலும், மலைகளிலும் ஒளிந்து தவமிருந்த முனிவர்கள் நரசிம்மரின் தரிசனம் கிடைக்கவேண்டினர். அப்படி காட்சியளித்த தலங்கள் தமிழகத்தில் 8 1உள்ளன. இத்தலத்தின் கிழக்கில் சிங்கிரிகோயில், மேற்கே அந்திலி, பரிக்கல், வடக்கே சோழிங்கர், சிங்கபெருமாள்கோயில், தெற்கே நாமக்கல், சிந்தலவாடி ஆகியன அமைந்துள்ளன.

நவக்கிரகங்களில் சூரியன் மையமாக அமைந்திருப்பது போல் அஷ்ட நரசிம்ம திருத்தலங்களுள் பூவரசங்குப்பம், ஸ்ரீ இலட்சுமிநரசிம்மர் திருத்தலம் மையமாக அமைந்துள்ளது.

**தல சிறப்பு.**

நரசிம்மர் இரண்யனை அழித்து பிரகலாதனுக்கு காட்சி கொடுத்த இடம் ஆந்திராவில் அகோபிலம் என அழைக்கப்படுகிறது. பூவரசங்குப்பத்தில் முனிவருக்குகளுக்கு காட்சியளித்தமையால் இவ்விடம் தென்அகோபிலம் என அழைக்கப்படுகிறது. முனிவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நரசிம்மர் இத்திருத்தலத்தில் மகாலட்சுமியை தனது இடது மடியில் அமர்த்தி காட்சியளித்தார். நரசிம்மரின் உக்கிரதினை குறைக்கும்பொருட்டு மகாலட்சுமி நரசிம்மரை ஒருகண்ணாலும், பக்தர்களை மறுகண்ணாலும் பார்பதுபோல் காட்சியளிக்கிறார். உலகில் ஆணுக்கு பெண் சமம் என்பதை பரைசாற்றும் விதமாக இத்திருக்கோயில் நரசிம்மர் மற்றும் தாயார் மகாலட்சுமி விக்ரகங்கள் சம உயரத்தில் அமைந்துள்ளன.

**திருக்கோயில் சிறப்புகள்.**

கி.பி. 3–ஆம் நூற்றாண்டில் தூணில் தோன்றியதால் ஒரு தூணையே நரசிம்மராக வழிபாடு செய்து வந்துள்ளனர். அதன் பின் பல்லவர்கள் நரசிம்மருக்கு கோயில் கட்டி சிலை பிரதிஷ்டை செய்துள்ளனர். இத்திருக்கோயிலில் தாயார், ஆண்டாள் சன்னதிகள் தனியாக அமைந்துள்ளது. இங்குள்ள அமிர்வல்லி தாயார் அமிர்ததிற்கு இணையான பலனை கொடுக்கவல்லவர். ஆகையால் அமிர்த பல வல்லி என்பது மறுவி அமிர்வல்லிதாயார் என்று அழைக்கப்படுகிறார்.

பொதுவாக இலட்சுமிநரசிம்மர் கோயில்களில் தாயார் மட்டுமே நரசிம்மரை ஆலிங்கனம் செய்த நிலையில் காட்சிதருவார். ஆனால் இத்திருக்கோயிலில் நரசிம்மர் இலட்சுமியை ஆலிங்கனம் செய்த நிலையில் அருள்பாலிப்பது சிறப்பாகும்.

மேலும், இம்மண்டபத்தில் புடைப்பு சிற்பத்தில் ஒரு பீடத்தின் மீது திருநாமம் இன்றி வில், அம்புடன் சங்கு சக்கரம் இருப்பது புதுமையான செய்தியாகும்.

இத்திருக்கோயிலில் திருப்பணிக்காக தோண்டப்படும்போது இலட்சுமிநரசிம்மரின் உற்சவர் விக்ரகம் ஆண்டாள் சன்னதியின் கீழ் கண்டு எடுக்கப்பட்டதாக தெரியவருகிறது. இந்த உற்சவர் விக்ரகமும் அகோபிலத்தில் உள்ள உற்சவர் விக்ரகமும் ஒரே தோற்றத்தையும் காலத்தையும் கொண்டிருக்கின்றன. எனவே, இரண்டு திருமேனிகளும் ஒரே நேரத்தில் வார்க்கப்பட்டவையாக இருக்கலாம் என கருதப்படுகிறது. மேலும், அகோபிலத்தில் திருக்கோயிலினை எழுப்பிய மன்னரே பூவரசங்குப்பம் திருக்கோயிலை கட்டியிருப்பதால் அதைபோன்ற உற்சவரை இங்கும் ஸ்தாபித்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மூலவர் | – | இலட்சுமிநரசிம்மர் |
| உற்சவர் | – | பிரகலாதவரதன் |
| தாயார் | – | அமிர்தவல்லி |
| தலவிருட்சம் | – | நெல்லி |
| தீர்த்தம் | – | சக்கரதீர்த்தம் |
| புராணபெயர் | – | தெட்சிண அகோபிலம். |

## முக்கிய உற்சவங்கள்.

- வாரந்தோறும் சனிக்கிழமை சிறப்பு தரிசனம்
- மாதாந்திர சுவாதி நட்சத்திர உற்சவம்
- பிரம்மோற்சவம் (திருத்தேரோட்டம்)
- நரசிம்மஜெயந்தி
- விசாக உற்சவம்
- ஆனிதிருமஞ்சனம்
- ஆடிப்பூரம்
- கிருஷ்ணஜெயந்தி
- நவராத்திரி
- தீபாவளி சிறப்பு அபிஷேகம்
- மகாவிஷ்ணு தீப அலங்காரசேவை
- வைகுண்டஏகாதசி
- பொங்கல் உற்சவம் (தென்பெண்ணை ஆற்றில் 5–ம் நாள் தீர்த்தவாரி உற்சவம்)
- மாசி மாதம் பௌர்ணமியன்று தீர்த்தவாரி உற்சவம்

## நடைதிறக்கும் நேரம்.

காலை.06.00 மணிமுதல் பகல் 12.30 மணிவரை

மாலை. 04.00 மணிமுதல் இரவு.08.00 மணிவரை

**மார்கழி மாதத்தில் மட்டும்** காலை.04.30 மணிமுதல் பகல்.12.30 மணிவரை

மாலை. 04.00 மணிமுதல் இரவு.08.00 மணிவரை

––––******––––